00024

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளிக் கல்வி சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை

**ESC1136/EPU1336 – கணிதத் திறன்களின் விருத்தி**

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

---

திகதி : **18/06/2023** நேரம்: மு.ப 9.30 – மு.ப 11.30

---

## பகுதி I

1. பியாஜேயின் விருத்திக் கட்டங்களையும் ஒத்த வயதுகளையும் பட்டியலிடுக.
2. 'அவதானித்துக் கற்றல்' என்பதனால் கருதப்படுவது யாது?
3. பிள்ளைகள் கணித எண்ணக்கருக்களை கற்கும் மூன்று (03) இயற்கையான வழிமுறைகளை சுருக்கமாக விளக்குக.
4. ஒன்றிற்கு மற்றொன்று தொடர்பு எனும் கணித எண்ணக்கருவில் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு அனுபவங்களை வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.
5. 'வகைப்படுத்தல்' என்பதனால் கருதப்படுவது யாது? வகைப்படுத்தலில் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) வகைகளையும் குறிப்பிடுக.
6. பிள்ளை தமது சுற்றாடலில் இருந்து பின்வரும் கேத்திரகணித உருக்களை பரீட்சயமாக்கிக்கொள்ள உதவும் பொருட்களைக் குறிப்பிடுக?
   அ) சதுரம்
   ஆ) வட்டம்
   இ) முக்கோணி
   ஈ) செவ்வகம்
   உ) நீள்வட்டம்
7. வரிசைப்படுத்துதல், கோலம் என்பன எவ்வாறு பிள்ளைகளின் தர்க்க ரீதியான தொடர்புகளை ஆராய உதவுகின்றன?
8. பிள்ளைகள் அமைவிடம் எனும் கணித எண்ணக்கருவை விருத்திசெய்யவேண்டியதன் முக்கியத்துவத்தினை விபரிக்க.

(8x5= 40 புள்ளிகள்)

00024


## பகுதி II

9.

i. 'சமச்சீர்' எனும் பதத்தினால் நீங்கள் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

ii. பின்வரும் கேத்திரகணித வடிவங்களை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அவற்றின் சமச்சீர் அச்சுக்களை வரைக.




(04 புள்ளிகள்)

iii. முன்பள்ளியில் சமச்சீர் எனும் எண்ணக்கருவை விருத்திசெய்ய பொருத்தமான செயற்பாடொன்றினை எழுதுக.

(12 புள்ளிகள்)

10.

i. மாற்றமின்மை என்பதனால் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

ii. எண்ணிக்கை மாற்றமின்மை எனும் எண்ணக்கருவை விருத்திசெய்ய பொருத்தமான செயற்பாடொன்றை எழுதுக.

(08 புள்ளிகள்)

iii. திரவங்களின் மாற்றமின்மை எனும் எண்ணக்கருவை விருத்திசெய்ய பொருத்தமான செயற்பாடொன்றை எழுதுக.

(08 புள்ளிகள்)

11.

i. முன்பள்ளியில் பிள்ளைகளுக்கு எண்களைப் பற்றிக் கற்பிக்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய படிமுறைகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ii. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு எண்களைப் பற்றி அறிமுகம் செய்வதற்கு பொருத்தமான செயற்பாடொன்றை எழுதுக.

(15 புள்ளிகள்)

12.

i. வரிசைப்படுத்தல் என்னும் கணித எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு வரிசைப்படுத்தல் என்னும் எண்ணக்கருவை அறிமுகம் செய்ய பொருத்தமான செயற்பாடொன்றினை கற்றல் கற்பித்தல் சாதனங்களுடன் முன்வைக்க.

(15 புள்ளிகள்)

13.

i. அளவீடு என்பதனால் கருதுவது யாதென சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிமுகம்செய்யக்கூடிய நான்கு (04) வகையான அளவீடுகளைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

iii. நீளத்தை அளத்தல் என்பதை முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிமுகம்செய்ய பொருத்தமான செயற்பாடொன்றினை கற்றல் சாதனங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது